DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No: **S.C.No.165/2025**

Prosecution Witness P.W.11

Name : **திருமதி.Dr.லட்சுமிபாய்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரி ஆஜர்

**நாள்: 15.04.2026**

(சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பகுதியில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 29.04.2025 ம் தேதியன்று மதுரை ராஜாஜி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது திரு.பவித்ரன் 19 வயது மதிக்கத்தக்க ஆண், த/பெ. ரமேஷ் ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம் என்பவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

2. அவரை நான் பரிசோதித்துப் பார்த்தபோது அவரது வலது கையில் மணிக்கட்டு மற்றும் கீழ்புற புறங்கை பகுதியில் ஒரு வெட்டுக்காயம் இருந்தது. அதன் அளவு 8 x 2 cm அளவு ஆகும். அந்தக் காயப்பகுதியில் கிழிந்த தசை நார்கள் தெரிந்தது. இடது கையில் உள்ள ஆள்காட்டி விரலில் மற்றொரு கிழிந்த காயம் 2 x 1 cm அளவில் உள்ளங்கை பகுதியில் கிழிந்த காயம் இருந்தது.

3. மற்றொரு கிழிந்த காயம் உள்ளங்கை பகுதியில் நடு விரலின் கீழ் பகுதியில் 3 x 0.5 சென்டிமீட்டர் அளவில் இருந்தது. மற்றொரு காயம் உள்ளங்கை பகுதியில் சுண்டு விரலின் கீழ் பகுதியில் 4 x 1 cm அளவில் இருந்தது. மற்றொரு காயம் இடது பக்க புஜம் பகுதியில் ஒரு தையலிடப்பட்ட

காயம் 8.00 cm அளவில் காணப்பட்டது. வலது பக்க மணிக்கட்டின் பின்புறத்தில் அதன் அடியில் உள்ள தசை நார்கள் கிழிந்த நிலையில் காணப்பட்டது, மேற்கண்ட காயத்தின் காரணமாக அவரது வலது கை செயல்பட இயலாமல் இருந்தது.

4. இடது கை ஆள்காட்டி விரலில் இரண்டு தசை நார்கள் வெட்டப்பட்டு இருந்தது, அதில் ஒரு நரம்பும் வெட்டப்பட்டு இருந்தது. அதன் காரணமாக இடது கை ஆள்காட்டி விரல் மடக்க இயலாமல் இருந்தது. மேற்கண்ட காயங்கள் அனைத்தும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு குணமானார். 10.05.2025 ம் தேதி வரை அவர் மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு அவர் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

5. அவருக்கு வலது கை வெளிப்புறத்தில் உள்ள எலும்பு அல்னா என்ற எலும்பு முறிவு காணப்பட்டது, அதற்காகவும் சிகிச்சை வழங்கப்பட்டது. அது சம்பந்தமான சிகிச்சை எலும்பு முறிவு மருத்துவர் வழங்கினார் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று வழங்கினேன். இது சம்பந்தமாக நான் வழங்கிய காயச் சான்றிதழ் அ.த.சா.ஆ.12. நீதிமன்றத்தில் காண்பிக்க கூடிய சா.பொ.1 அருவாளால் இந்த காயம் ஏற்பட்ட வாய்ப்பு உண்டு.

6. இடது கை உள்ளங்கையில் ஏற்பட்டுள்ள காயமானது தற்காப்புக்காக ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு.தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவருக்கு தலையில் நிறைய காயங்கள் ஏற்பட்டுள்ளது தொடர்பாக அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு அது சம்பந்தமான தையல் இடப்பட்ட காயங்கள் இருந்ததை பார்த்தேன். அவருக்கு தலையிலும் எலும்பு முறிவு காணப்பட்டது. இது தவிர அவருக்கு நெஞ்சு பகுதியிலும் காயம் இருந்தது, அதற்கும் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. ஆவணங்களை பார்த்து கருத்துறை வழங்கப்பட்டதா நேரடியாக சிகிச்சை வழங்கியதன் அடிப்படையில் நான் கருத்துரை வழங்கி உள்ளேனா என்றால் நான் நேரடியாக சிகிச்சை வழங்கியதன் அடிப்படையிலும், அவருக்கு

வழங்கப்பட்ட சிகிச்சை தொடர்பான ஆவணங்களை பார்த்த வகையிலும் நான் கருத்துரை வழங்கியுள்ளேன்.

2. மேற்கண்ட நபருக்கு நான் எந்த தேதியில் முதல் முதலாக சிகிச்சை தொடங்கினேன் என்றால் 29.04.2025 ஆம் தேதியன்று அவரை நான் பரிசோதனை செய்து அன்றைய தினமே அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டேன். எனது அறிக்கையில் அவருக்கு சிகிச்சை வழங்கிய நேரம் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சிகிச்சை அளிக்கும் போது மேற்கண்ட நபர் பேசும் நிலையில் இருந்தாரா என்றால் பேசும் நிலையில் இருந்தார். அவரது உடல் இயக்கங்கள் சீராக இருந்தது நோயாளி சுயநினைவுடன் இருந்தார்.

3. நான் வழங்கிய அறிக்கையில் மேற்கண்ட நபருக்கு எப்படி காயங்கள் ஏற்பட்டது என்ற விபரங்களை அவரிடம் கேட்டு நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நோயாளி மருத்துவமனையில் அனுமதிக்கும் போது அது பற்றி விவரங்கள் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்பதால் நான் தனியாக இது சம்பந்தமான விவரங்களை கேட்டு பதிவு செய்யவில்லை. நான் கூறுவது போல் எந்தவிதமான பரிசோதனையும் மேற்கொள்ளவில்லை என்றும், காவல்துறையினர் கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.15 15:46:40 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.